## முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.

2023 ம் ஆண்டு ஜூலை மாதம் 7-ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1-ன் வாக்குமூலம் 1989 ம் ஆண்டு 19 வது விதி ஏற்பாட்டின்படி எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

அ.வ.எண்.932/2015

வா.சா.1 நவீனா

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-**

என் தாத்தாவின் அப்பா பெயர் சென்னிமலை கவுணடர் ஆகும். சென்னிமலை கவுண்டருக்கு என் தாத்தாவை தவிர மூன்று பெண்கள் என்றால் சரிதான். அவர்கள் பெயர் ராமாயம்மாள், தங்கம்மாள், லட்சுமி ஆவார்கள். வா.த.சா.ஆ.4 விடுதலை பத்திரம் 07.11.2007 தேதியில் மேற்படி ராமாயம்மாள், தங்கம்மாள், லட்சுமி ஆகியோர்கள் 1 ம் பிரதிவாதியான வாரணவாசி கவுண்டருக்கு எழுதிக் கொடுத்தார்கள். சென்னிமலை கவுண்டர் 1991 ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் தெரியாது. 2007 ம் வருடம் பொது குடும்பச் சொத்துக்கள் முழுவதையும் விடுதலை எழுதிக் கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.4 விடுதலை ஆவணத்தில் பொது குடும்பச் சொத்துக்கள் முழுவதும் எழுதிக் கொடுத்ததாக உள்ளதா என்றால் ஒரு பாகம் மட்டும் தான் எழுதிக் கொடுத்ததாக உள்ளது. ஒரு பாகம் மட்டும் கூட்டு குடும்பச் சொத்தை பொருத்து எழுதிக் கொடுத்ததற்கு தனிப்பட்ட காரணம் ஏதாவது உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொன்னது போல் வா.த.சா.ஆ.4 விடுதலை ஆவணம் பொது குடும்பச் சொத்தில் ஒரு பங்கை பொருத்து மட்டும் எழுதிக் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.4 விடுதலை ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்கள் மட்டும் தான் பொதுக் குடும்பச் சொத்துக்கள் என்றும், அதனால் தான் மேற்படி விடுதலை ஆவணத்தில் அந்த சொத்துக்களை மட்டும் குறிப்பிட்டு விடுதலை எழுதிக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.4 விடுதலை ஆவணத்தில் கண்டுள்ள சொத்துக்களை தவிர இதர சொத்துக்களான தாவாச் சொத்துக்கள் வாரணவாசி கவுண்டருக்கு தனிப்பட்ட சொத்துக்கள் என்பதால் தான் வா.த.சா.ஆ.4 விடுதலை ஆவணத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையிலேயே தாவாச் சொத்துக்கள் அனைத்தும் பூர்வீகச் சொத்துக்கள் என்று குறிப்பிட்டு வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையில் பூர்வீகச் சொத்துக்கள் என்று சொல்லாமல் முதல் முறையாக என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

என் தாத்தாவிற்கு அவரது அப்பா மூலமாக வந்த பூமி 5 ½ ஏக்கர் என்றால் சரியல்ல, 11 ½ ஏக்கர் பூமி வந்தது. 11 ½ ஏக்கர் பூமியில் 12 ல் ஒரு பாகம் கேட்டு இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என் தாத்தாவிற்கு அவரது அப்பா சென்னிமலை கவுண்டர் மூலமாக வந்த 11 ½ ஏக்கரில் எனக்கு பாகம் கிடைத்தால் போதும். சென்னிமலை கவுண்டர் எப்போது இறந்தார் என்று தெரியாது. அவர் இறக்கும் வரை குடும்ப தலைவராக இருந்தார் என்றால் சரிதான். சென்னிமலை கவுண்டர் இறந்த பிறகு 1 ம் பிரதிவாதி மேற்படி 11 ½ ஏக்கர் பூமிக்கு குடும்ப தலைவராக இருந்து வந்தார் என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்கு 2 ம் பிரதிவாதி சண்முகம் குடும்ப தலைவர் என்றால் சரிதான். என் அப்பாவிற்கு 3,4 பிரதிவாதிகள் சகோதரர்கள் என்றால் சரிதான். எனக்கும் 3,4 பிரதிவாதிகளுக்கிடையே விரோதம் எதுவும் இல்லை. 5 ம் பிரதிவாதி எனது அண்ணன். நானும், 5 ம் பிரதிவாதியும் சேர்ந்து தான் வெவ்வேறு வழக்கறிஞர் மூலமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. 5 ம் பிரதிவாதிக்கு திருமணமாகிவிட்டது. 1 ம் பிரதிவாதியான என் தாத்தா வாரணவாசி கவுண்டருக்கு பொது குடும்பச் சொத்துக்கள் 4 ஏக்கர் மட்டும் தான் என்றால் சரியல்ல. 11 ½ ஏக்கர் பூமியானது மேட்டு பூமி என்றால் சரியல்ல, தண்ணீர் பாசனம் உள்ளது. எத்தனை ஏக்கர் பூமிக்கு தண்ணீர் பாசனம் உள்ளது என்றுத் தெரியாது. பூமியில் இருந்து கிடைக்கும் வருமானம் குடும்ப செலவிற்கே பாத்தாது என்றால் சரியல்ல. அதனால் தான் என்னுடைய வழக்குரையில் 11 ½ ஏக்கர் பூமியில் வருமானம் எதுவும் வரவில்லை என்றும், அதனால் தான் அந்த விபரம் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. சென்னிமலை கவுண்டருக்கும், எனக்கும் விரோதம் இல்லை என்றால் நான் பிறப்பதற்கு முன்பாகவே அவர் இறந்துவிட்டார். 1 ம் பிரதிவாதிக்கும் எனக்கும் விரோதம் இல்லை. 1 ம் பிரதிவாதியை நான் நேரில் சந்தித்து பாகம் கேட்கவில்லை என்றால் சரிதான், தெரிந்தவர்கள் மூலமாகவும், போன் மூலமாகவும் பாகம் கேட்டேன். 1 ம் பிரதிவாதி இந்த வழக்கில் என்ன எதிர்வாதம் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் தெரிந்து கொண்டேன். வா.த.சா.ஆ.4 விடுதலை ஆவணத்தில் 5 ½ ஏக்கர் பூமியை தவிர இதர சொத்துக்கள் காண்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். வாரணவாசி கவுண்டரின் சகோதரிகள் வா.த.சா.ஆ.4 விடுதலை ஆவணத்தின்படி விடுதலை செய்து கொடுத்து 5 ½ ஏக்கர் சொத்துக்களை தவிர மீதி உள்ள சொத்துக்களில் அவர்களுக்கும் பாகம் உள்ளதா என்றால் அவர்களுக்கு பாகம் இல்லை, அதற்கான காரணம் தெரியாது. 1 ம் பிரதிவாதியின் மூன்று சகோதரிகளையும் இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பொது குடும்பச் சொத்துக்கள் மொத்தம் 5 ½ ஏக்கர் பூமி என்றும், அதில் 1 ம் பிரதிவாதியின் சகோதரிகளுக்குண்டான பாகத்தை விடுதலை செய்து

கொடுத்துவிட்டார்கள் என்றும், அதனால் தான் வழக்குரையில் அவர்களை தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றும், அவர்களுக்கு பங்கு விகிதாசரத்தை பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 5 ½ ஏக்கர் பூமியில் எவ்வித விவசாய வருமானமும் இல்லாததால் தான் 1ம் பிரதிவாதி கிராமங்களுக்கு சென்று நெல்லை வாங்கி அதை அரிசியாக்கி வியாபாரம் செய்து வந்தார் என்றும், அந்த சமயத்தில் நான் பிறக்கவே இல்லை என்பதால் தான் மேற்படி விபரம் எனக்கு தெரியவரவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி அவருடைய திருமணத்திற்கு முன்பே நெல் வியாபாரம் செய்து வந்தார் என்றால் தெரியாது. 1ம் பிரதிவாதி நெல்லை வாங்கி அரிசியாக்கி வியாபாரம் செய்து வந்த விபரம் எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி தனியாக உழைத்து சம்பாதித்த வருவாயை கொண்டு தான் சொத்துக்களை கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல, கூட்டு குடும்ப வருவாயை கொண்டு தான் கிரையம் வாங்கினார். 1ம் பிரதிவாதி கிரையம் பெற்றதாக 1ம் பிரதிவாதி பெயரிலுள்ள கிரைய ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**